உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தின் விரிவாக்கத்திற்கு, அருகில் இடம் இருக்கும்பட்சத்தில், ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, விரைவாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

கால்நடை மருத்துவமனை

***24365—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, தென்பரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், தென்பரை கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். அங்கே 3,000-க்கும் அதிகமாக கால்நடை அலகுகள் உள்ளதால், அரசு விதிகளின்படி கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, விதிகளுக்குட்பட்டு கால்நடை கிளை நிலையம் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், தென்பரை கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அந்த ஊர் மக்கள் பல்லாண்டு காலமாகக் கோரி வருகிறார்கள். தென்பரை மற்றும் அதன் அருகிலுள்ள கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் உள்ளன. தற்போது அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் கால்நடைகளை 5 கி.மீ. தூரத்திலுள்ள திருமக்கோட்டை அல்லது வடுவூருக்குதான் எடுத்துச் செல்லவேண்டியுள்ள காரணத்தினால், அப்பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இவ்வாண்டே கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தந்தால், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடத்திற்கான தொகையை உடனடியாக நான் ஒதுக்கித் தருகிறேன் என்று இங்கேயே உறுதிமொழி அளிக்கிறேன். ஆகவே இவ்வாண்டே கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவாரா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, இந்த ஆண்டு கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்திலே அனுமதி பெற்று, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 26—3—2013 அன்று இதே மாமன்றத்தில் எடமேலையூர் கிராமத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் அமைத்துத் தருவதாகத் தெரிவித்துள்ளார். அதன் தற்போதைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகின்றேன். அதேபோல் நீடாமங்கலம் ஒன்றியத்தில் இராயபுரம், பூவனூர், தட்டைக்காலப்படுகை, ரொக்கக் குத்தகை,

ராசப்பையன் சாவடி, தென்கரைவயல், ஜனச்சேரி, இடும்பட்டு, நாவல்பூண்டி, காளாஞ்சிமேடு, சோனாப்பேட்டை, வடகரைவயல் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களும் இதே பிரச்சினையால் அவதிப்படுகிறார்கள். எனவே, அந்தந்த இடங்களிலும் கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை உறுப்பினர் அவர்கள் எடகிழையூர் கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அங்கே துறையின் சார்பாக திருவாரூர் R.J.D. அவர்கள் ஆய்வு செய்ததிலே, அதன் அருகிலுள்ள எடமேலையூரிலே ஒரு கால்நடை மருந்தகம் இருப்பதால், கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்தார். மேலும், உறுப்பினர் அவர்கள் செருமங்கலம் கிராமத்திலே ஒரு கிளை நிலையம் கேட்டிருந்தார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு, அதிகமாக கால்நடைகள் இருப்பதால், அங்கே அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. அங்கே விரைவில் அதை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

சுற்றுலாத் தலம்

***5507—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—